**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

# <u>CC.NO- 190/2019</u>

## Dated :18.03.2026

## Deposition of witness for : P.W.4

## List of Witness LW6 Examined as PW4 (Mahazar Witness )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **நல்லையா** | வயது | : | 54 |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | பெருங்களூர் | தொழில் | : | Fire Safety |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

( 1, 3 எதிரிகள் ஆஜர். 2 ஆம் எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து சீனு Fire Safety என்ற நிறுவனம் வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் கடந்த 2018 ஆம் ஆண்டு, 7 ஆம் மாதம், தேதி ஞாபகம் இல்லை, மாலை சுமார் 04.00 மணியளவில், நானும் தேவேந்திரன் என்பவரும் பெருங்களூர் முல்லை நகரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் நின்று கொண்டிருந்தோம். அப்போது, ஆதனக்கோட்டை காவல் உதவி ஆய்வாளர் பழனி என்பவர் அங்கு வந்து, பள்ளி மாணவர்களுக்கு இடையே தகராறு நடந்ததா என்று கேட்டார். நான் சண்டை நடந்ததாக கேள்விப்பட்டேன் யார் யாருக்கு இடையே சண்டை என்று தெரியவில்லை என்று சொன்னேன். பின்னர், என்னிடம் வரைபடம் வரைந்ததற்காக ஒரு கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எந்த தேதியில் போலிசார் விசாரித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான், ஞாபகம் இல்லை. போலிசார் என்னிடம் ஒரு வெற்றுத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

**3 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.18 17:35:14 +0530

**நா.சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கந்தர்வகோட்டை.**